# அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில்

## சித்திரைப் பெருந்திருவிழா அழைப்பிதழ்

(06.05.2017 - 14.05.2017)




tnhrce.org

# அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில்

## மேலூர் வட்டம், மதுரை மாவட்டம் – 625 301.

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், அழகர்கோயிலின் அழகர்மலை, திருவேங்கட மலைக்கு இணையாகப் போற்றப்படும் திருமலை இது. திருமாலின் திருவடிச் சிலம்பிலிருந்து புனித தீர்த்தம் சிலம்பாறு (நூபுர கங்கை) என்ற பெயருடன் வற்றாமல் இன்சுவையுடைய நீரை வழங்குகின்றது. இந்தத் தீர்த்தம் தனிச்சுவையும் வினை தீர்க்கும் மருந்துமாய் சிறந்து விளங்குகின்றது. இது போல் ஆயிரம் ஆறுகளும் சுனைகள் பல ஆயிரமும் இம்மலையில் இருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் மற்றும் ஆண்டாள் நாச்சியார் இவர்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது. 108 திவ்ய தேசங்களில் அதிகமான பாசுரங்களைப் பெற்ற தலங்களின் வரிசையில் திருவரங்கம் மற்றும் திருவேங்கடத்திற்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தில் உள்ளது.

tnhrce.org

அருள்மிகு கள்ளழகர் ஆண்டுதோறும் சித்ரா பௌர்ணமியன்று மண்டூக முனிவருக்கு சாபவிமோசனம் கொடுக்கும் பொருட்டும், "சுந்தரத்தோளுடையான்" என்று அருள்மிகு ஆண்டாள் மங்களாசாசனம் செய்த சுந்தரத் தோள்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை ஆண்டாள் சாற்றிக்கொண்ட திருமாலையை ஏற்றுக்கொள்ளும் பொருட்டும், சுந்தரராஜப் பெருமாள் "கள்ளர் திருக்கோலத்துடன்" மதுரையம்பதிக்கு எழுந்தருள்வார். இந்நிகழ்ச்சி மதுரை மாநகரில் சித்திரைப் பெருவிழாவாக இந்தியாவின் மிகச் சில அறிவிக்கப்பட்ட திருவிழாக்களுள் ஒன்றாக உள்ளது. இவ்விழாவானது இணைப்பிற்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி சிறப்பாக நடைபெற உள்ளதால் பக்தர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவும் அருள் பெறவும் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வி. ஆர். வெங்கடாஜலம்
தக்கார்

செ. மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,
துணை ஆணையர் / செயல் அலுவலர்

| நாள் | அருள்மிகு பெருமாள் எழுந்தருளும் இடம் | எழுந்தருளும் காலம் | புறப்படும் காலம் | விபரம் |
|---|---|---|---|---|
| ஸ்ரீ ஹேவிளம்பி சித்திரை 23 06.05.2017 சனி | திருக்கல்யாண மண்டபம் அழகர் கோயில் | மாலை 6.00 | மாலை 7.00 | தோளுக்கினியான் |
| சித்திரை 24 07.05.2017 ஞாயிறு | திருக்கல்யாண மண்டபம் அழகர் கோயில் | மாலை 6.00 | மாலை 7.00 | தோளுக்கினியான் |
| சித்திரை 25 08.05.2017 திங்கள் | திருக்கல்யாண மண்டபம் அழகர் கோயில் | காலை 11.00 | பகல் 12.00 | தோளுக்கினியான் |
| | கொண்டப்பநாயக்கர் மண்டபம் | இரவு 7.00 | இரவு 7.45 | தங்கப்பல்லக்கில் கள்ளர் திருக்கோலத்தில் மதுரைக்கு எழுந்தருளல் |
| | பொய்கைக்கரைப்பட்டி | இரவு 9.00 | இரவு 9.30 | |
| | கள்ளந்திரி | இரவு 10.00 | இரவு 10.30 | |
| | அப்பன்திருப்பதி | இரவு 11.30 | இரவு 12.30 | |
| சித்திரை 26 09.05.2017 செவ்வாய் | சுந்தரராஜன்பட்டி மறவர் மண்டபம் | அதிகாலை 1.30 | அதிகாலை 2.30 | தங்கப்பல்லக்கில் கள்ளர் திருக்கோலத்தில் மதுரைக்கு எழுந்தருளல் |
| | கடச்சனேந்தல் | காலை 3.00 | காலை 4.00 | |
| | மூன்று மாவடி | காலை 6.00 | காலை 7.00 | எதிர்சேவை |
| | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், புதூர் | காலை 9.00 | காலை 9.05 | |
| | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், ரிசர்வ்லைன் | பகல் 12.00 | பகல் 1.00 | |
| | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், அவுட்போஸ்ட் | மாலை 5.00 | மாலை 5.15 | |
| | அம்பலகாரர் மண்டபம் | மாலை 5.30 | மாலை 6.00 | |
| | தல்லாகுளம் அருள்மிகு பிரசன்னவெங்கடாஜலபதி திருக்கோயில் | இரவு 9.30 | இரவு 12.00 | அருள்மிகு பெருமாள் திருமஞ்சனமாகி தங்கக்குதிரை வாகனத்தில் எழுந்தருளுதல் திருவில்லிபுத்தூர் சூடிக்கொடுத்த நாச்சியார் அருள்மிகு ஆண்டாளுடைய திருமாலையைச்சாற்றி பக்தர்களுக்கு சேவை சாதித்தல் வெட்டிவேர் சப்பரம் |

tnhrce.org

## 08.05.2017 திங்கள்கிழமை

# கள்ளர் திருக்கோலம்



## 09.05.2017 செவ்வாய்க்கிழமை காலை

# மூன்று மாவடியில் எதிர்சேவை

## 10.05.2017 புதன்கிழமை

# கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளல்

| நாள் | அருள்மிகு பெருமாள் எழுந்தருளும் இடம் | எழுந்தருளும் காலம் | புறப்படும் காலம் | விபரம் |
|---|---|---|---|---|
| சித்திரை 27<br>10.05.2017<br>புதன் | அருள்மிகு<br>கருப்பண சுவாமி<br>திருக்கோயில் | காலை 2.30 | காலை 3.00 | ஆயிரம் பொன்<br>சப்பரம் |
| | வைகை ஆறு | காலை<br>6.15– 7.00 | | வைகை ஆற்றில்<br>எழுந்தருளல் |
| | வைகை ஆற்றிலிருந்து<br>புறப்பாடு | | காலை 7.25 | வையாழி ஆனவுடன்<br>அருள்மிகு வீரராகவப்<br>பெருமாளுக்கு மாலை<br>சாத்துதல் |
| | இராமராயர் மண்டபம் | பகல் 12.00 | பிற்பகல் 2.00 | அங்கப்பிரதட்சணம் |
| | வண்டியூர் அருள்மிகு<br>வீரராகவப் பெருமாள்<br>திருக்கோயில் | இரவு 11.00 | | வண்டியூர்<br>அருள்மிகு<br>வீரராகவப்பெருமாள்<br>திருக்கோயிலுக்கு<br>எழுந்தருளல் |

tnhrce.org



## 11.05.2017 வியாழக்கிழமை

# ஏகாந்த சேவை

tnhrce.org

| நாள் | அருள்மிகு பெருமாள் எழுந்தருளும் இடம் | எழுந்தருளும் காலம் | புறப்படும் காலம் | விபரம் |
|---|---|---|---|---|
| சித்திரை 28<br>11.05.2017<br>வியாழன் | வண்டியூர்<br>கோயிலிலிருந்து<br>புறப்பாடு | | காலை 6.00 | திருமஞ்சனம்<br>கண்டருளி<br>சைத்திரயோபசாரம்<br>ஏகாந்த சேவை<br>பந்தி உலாவுதல் |



## 11.05.2017 வியாழக்கிழமை

# சேஷ வாகனம்

### ஸ்ரீ பெரியாழ்வார் திருமொழி

பலபல நாழஞ் சொல்லிப் பழித்த சிசுபாலன் தன்னை
அலவலமை தவிர்த்த அழகன் அலங்காரன் மலை
குலமலை கோலமலை குளிர்மாமலை கொற்றமலை
நிலமலை நீண்டமலை திருமாலிருஞ்சோலையதே!

tnhrce.org

| நாள் | அருள்மிகு பெருமாள் எழுந்தருளும் இடம் | எழுந்தருளும் காலம் | புறப்படும் காலம் | விபரம் |
| --- | --- | --- | --- | --- |
| சித்திரை 28<br>11.05.2017<br>வியாழன் | வண்டியூர்<br>அருள்மிகு வீரராகவப்<br>பெருமாள் கோயிலில் | | காலை 11.00 | காலை 9.00 மணிக்கு திருமஞ்சனமாகி எழுந்தருளல்<br><br>வண்டியூர் அருள்மிகு வீரராகவப் பெருமாள் கோயிலிலிருந்து சேஷ வாகனத்தில் தேனூர் மண்டபத்திற்கு எழுந்தருளல் |



அருள்மிகு சுந்தரராஜப் பெருமாள்

# 11.05.2017 வியாழக்கிழமை

# கருட வாகனம்



கருட வாகனத்தில்
அருள்மிகு **சுந்தரராஜப் பெருமாள்**

### ஸ்ரீ நம்மாழ்வார் திருமொழி

முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ!
அடிச்சோதி நீ நின்றதாமரையாய் அலர்ந்ததுவோ!
படிச்சோதி யாடையொடும் பல்கலனாய் நின்பைம்பொன்!
கடிச்சோதி கலந்ததுவோ! திருமாலே! கட்டுரையே!

tnhrce.org

| நாள் | அருள்மிகு பெருமாள் எழுந்தருளும் இடம் | எழுந்தருளும் காலம் | புறப்படும் காலம் | விபரம் |
|---|---|---|---|---|
| சித்திரை 28<br>11.05.2017<br>வியாழன் | தேனூர் மண்டபம் | காலை 11.00 | பிற்பகல் 3.00 | திருமஞ்சனமாகி பிறகு கருட வாகனத்துடன் பிரசன்னமாகி மண்டூக முனிவருக்கு சாபம் தீர்த்து காட்சி தந்தருளல் |
| | அருள்மிகு<br>அனுமார் கோயில் | பிற்பகல் 3.30 | பிற்பகல் 4.00 | அங்கப்பிரதட்சணம் |
| | இராமராயர் மண்டபம் | இரவு 11.00 | | திருமஞ்சனம் |
| | | | | இரவு 12.00 மணி முதல் தசாவதாரம் |

# தசாவதார நிகழ்ச்சிகள்

(இரவு 12.00 மணி)



முத்தங்கி சேவை



மச்ச அவதாரம்

tnhrce.org

# தசாவதார நிகழ்ச்சிகள்



கூர்ம அவதாரம்



வாமன அவதாரம்

tnhrce.org

# தசாவதார நிகழ்ச்சிகள்



இராம அவதாரம்



கிருஷ்ண அவதாரம்

tnhrce.org

# 12.05.2017 வெள்ளிக்கிழமை

# மோகினி அவதாரம்




**ஸ்ரீதிருமங்கையாழ்வார் பெரிய திருமொழி**

நேசமில்லாதவர்க்கும் நினையாதவர்க்கும் அரியான்
வாசமலர்ப் பொழில் சூழ் வடமா மதுரைப் பிறந்தான்
தேசமெல்லாம் வணங்கும் திருமாலிருஞ்சோலை நின்ற
கேசவ நம்பி தன்னைக் கெண்டையொன்கண்ணி காணுங்கொலோ

tnhrce.org

| நாள் | அருள்மிகு பெருமாள் எழுந்தருளும் இடம் | எழுந்தருளும் காலம் | புறப்படும் காலம் | விபரம் |
|---|---|---|---|---|
| சித்திரை 29<br>12.05.2017<br>வெள்ளி | இராமராயர் மண்டபம் | காலை 6.00 | | மோகினி அவதாரத்துடன் பத்தி உலாவுதல் |
| | | | பகல் 12.00 | திருமஞ்சனம் அதன் பின் அனந்தராயர் பல்லக்கில் இராசாங்க திருக்கோலத்துடன் எழுந்தருளல் |
| | இராமநாதபுரம் மன்னர் சேதுபதி மண்டபம் | இரவு 11.00 | | திருமஞ்சனம் |

## 13.05.2017 சனிக்கிழமை பூப்பல்லக்கு

| நாள் | அருள்மிகு பெருமாள் எழுந்தருளும் இடம் | எழுந்தருளும் காலம் | புறப்படும் காலம் | விபரம் |
|---|---|---|---|---|
| சித்திரை 30<br>13.05.2017<br>சனி | இராமநாதபுரம் மன்னர் சேதுபதி மண்டபம் | | அதிகாலை 2.30 | பூப்பல்லக்கில் கள்ளர் திருக்கோலத்துடன் அருள்மிகு கருப்பண சுவாமி கோயில் சந்நிதியில் வையாழியானவுடன் திருமாலிருஞ்சோலை மலைக்கு எழுந்தருளல் |
| | மாரியம்மன் கோயில் அவுட்போஸ்ட் | காலை 8.50 | காலை 8.55 | மேற்படி கோலத்துடன் |
| | அம்பலகாரர் மண்டபம் | காலை 9.00 | பகல் 11.00 | அழகர் மலைக்கு எழுந்தருளல் |
| | மூன்று மாவடி | இரவு 7.00 | இரவு 8.30 | அழகர் மலைக்கு எழுந்தருளல் |
| | மறவர் மண்டபம் | இரவு 10.00 | இரவு 1.00 | திருமஞ்சனமாகி அழகர் மலைக்கு எழுந்தருளல் |

tnhrce.org

## 14.05.2017 ஞாயிற்றுக்கிழமை இருப்பிடம் சேர்தல்

| நாள் | அருள்மிகு பெருமாள் எழுந்தருளும் இடம் | எழுந்தருளும் காலம் | புறப்படும் காலம் | விபரம் |
|---|---|---|---|---|
| சித்திரை 31<br>14.05.2017<br>ஞாயிறு | அப்பன் திருப்பதி | அதிகாலை 3.00 | அதிகாலை 4.00 | அழகர் மலைக்கு எழுந்தருளல் |
| | கள்ளந்திரி | காலை 6.00 | | அழகர் மலைக்கு எழுந்தருளல் |
| | அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் | | | காலை 10.30 மணிக்குமேல் 12.00 மணிக்குள் இருப்பிடம் சேர்தல் |

## 15.05.2017 திங்கள்கிழமை உற்சவ சாந்தி

| நாள் | அருள்மிகு பெருமாள் எழுந்தருளும் இடம் | எழுந்தருளும் காலம் | புறப்படும் காலம் | விபரம் |
|---|---|---|---|---|
| வைகாசி 1<br>15.05.2017<br>திங்கள் | அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் | | | உற்சவ சாந்தி |

## பக்தர்களுக்கு வசதிகள்

1. தங்குவதற்கு ஓய்வு விடுதிகள் உள்ளன.
   நாள் ஒன்றுக்கு கட்டணம் ரூ.500/- ரூ.750/- மற்றும் ரூ. 1,000/-
2. கல்யாண மண்டபம் காணிக்கை நாள் ஒன்றுக்கு ரூ.1500/- ரூ.3000/-
   மற்றும் சிறிய மண்டபம் காணிக்கை நாள் 1க்கு ரூ.500/-.
3. காட்டேஜ் விடுதி நாள் ஒன்றுக்கு காணிக்கை ரூ. 2500/-
4. வழிபடுவோர் தங்குவதற்கு இலவச ஓய்வுக்கூடங்கள் உள்ளன.
4. வழிபடுவோர் நூபுரகங்கை சென்றுவர மினி பஸ் வசதி உள்ளது.
   ஒருவழி பயணத்திற்கு நபர் ஒருவருக்கு ரூ.10/-.
5. தலவரலாறு மற்றும் விளம்பரச் சிற்றேடு பெருமாள் படங்கள்
   திருக்கோயில் புத்தக நிலையத்தில் கிடைக்கும்.

## திருவிழாக்கள்

1. சித்திரை மாதம் – சித்திரைப் பெருந்திருவிழா
2. வைகாசி மாதம் – வசந்த உற்சவம்
3. ஆனி மாதம் – முப்பழ உற்சவம்
4. ஆடி மாதம் – ஆடிப் பெருந்திருவிழா
5. ஆவணி மாதம் – திருப்பவித்ர உற்சவம்
6. புரட்டாசி மாதம் – பிரம்மோத்சவம் (உபகோயிலான மதுரை
   தல்லாகுளம் அருள்மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயிலில்)
7. ஐப்பசி மாதம் – தைலக்காப்பு அருள்மிகு பெருமாள்
   நூபுர கங்கைக்கு எழுந்தருளல்
8. கார்த்திகை மாதம் – கார்த்திகை தீப உற்சவம்
9. மார்கழி மாதம் – (பகல்பத்து, இராப்பத்து) திருஅத்யயன உற்சவம்
10. தை மாதம் – கனு உற்சவம்
11. மாசி மாதம் – கஜேந்திர மோட்சம் & தெப்ப உற்சவம்
12. பங்குனி மாதம் – திருக்கல்யாண உற்சவம்

tnhrce.org

## காணிக்கை விபரம் (பொருட்கள் சொந்த செலவில்)

1. அருள்மிகு சுந்தரராசப் பெருமாள் திருமஞ்சனக் காணிக்கை = ரூ. 5000/-.
2. அருள்மிகு சக்கரத்தாழ்வார் திருமஞ்சனக் காணிக்கை = ரூ. 1000/-.
3. அருள்மிகு யோக நரசிம்மர் திருமஞ்சனக் காணிக்கை = ரூ. 1000/-.

## பூஜை உபயம்

1. உச்சிக்கால பூஜை உபயதாரர் குறிப்பிட்ட தினத்தில்
   100 நபர்களுக்கு பிரசாதம் வழங்குதல் = ரூ. 5000/-.
2. ஆறுகால பூஜை நிரந்தர வைப்புநிதி = ரூ. 50, 000/-.
3. ஒருநாள் ஆறுகால பூஜை காணிக்கை = ரூ. 6000/-.

## அன்னதானத்திட்டம்

1. அழகர்கோயிலில் தினசரி மதியம் ஒருவேளை உணவு 100 பக்தர்களுக்கு சிறப்பாக வழங்கப்பட்டு வருகிறது. அன்னதானத்திட்டத்திற்கு நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன.

2. தல்லாகுளம் அருள்மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயில், அருள்மிகு அய்யப்பன் திருக்கோயில் மற்றும் வண்டியூர் அருள்மிகு வீரராகவப்பெருமாள் திருக்கோயில்களில் நாள் 1க்கு 50 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

## நன்கொடை விபரம்

| | |
|---|---|
| நாள் 1க்கு 100 நபர்களுக்கு மதியம் 1 வேளை அன்னதானம் வழங்க | = ரூ. 2500/-. |
| நிரந்தர வைப்பு நிதி திட்டம் (வருடத்தில் ஒருநாள் உபயதாரர் விரும்பும் நாளில் 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்க) | = ரூ. 35,000/-. |
| நாள் 1க்கு 50 நபர்களுக்கு மதியம் 1 வேளை அன்னதானம் வழங்க | = ரூ. 1250/-. |
| நிரந்தர வைப்பு நிதி திட்டம் (50 நபர்களுக்கு அன்னதானம் வழங்க) | = ரூ. 20,000/-. |

மேலும் மொத்தமாக வைப்புநிதி ஏற்படுத்த நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன.
இதற்கு வருமானவரிச் சட்டம் 80G - ன் கீழ் வரிவிலக்கு உண்டு.
நன்கொடையாக அரிசி, காய்கறி மற்றும் இதர பொருட்களும் வழங்கலாம்.
அன்னதானத்திட்டத்தில் பங்கேற்று அருள்மிகு கள்ளழகரின் திருவருள் பெற வேண்டுகின்றோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி
துணை ஆணையர் / நிர்வாக அதிகாரி,
அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்,
அழகர்கோவில் -625 301. மதுரை மாவட்டம்.
தொலைபேசி : 0452-2470228.
தொலை நகல் : 0452-2470375
website : www.alagarkovil.org
E-mail id : alagarkovilmadurai@gmail.com

**வி.ஆர்.வெங்கடாஜலம்**
தக்கார்

**செ.மாரிமுத்து,** பி.ஏ.பி.எல்.,
துணை ஆணையர் / செயல் அலுவலர்


tnhrce.org


tnhrce.org